கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிதம்பரம்

**அசல் வழக்கு எண்..274/2012**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 19.11.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 19.11.2024 | சாட்சி | பி.வா.சா.10 |
| பெயர் | ஆறுமுகம் | வயது.. | 68 |
| தந்தை பெயர்.. | பெருமாள்சாமி | கிராமம்.. | சிவபுரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1. நான் சிவபுரியில் பிறந்தது முதல் தற்போது வரை வசித்து வருகிறேன் என்பது தொடர்பான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் கைவசம் உள்ளது. வாதியின் தாத்தா ராஜங்கநாடாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கல்யாணசுந்தர நாடார் மகன்கள் நடராஜன் நாடார், சுப்பிரமணி நாடாரை தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி எப்படி எந்த இடத்தில் அவர் கள் தங்கியிருந்தார்கள் போன்ற விவரங்கள் தெரியுமா என்ாறல் தெரியும். 1ம் பிரதிவாதி சேதுஅம்மாள் எந்த உரிமையில் அங்கே தங்கியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி சேதுஅம்மாள் இறந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சேதுஅம்மாளின் கணவர் பெயர் தெரியுமா என்றால் பாலசுப்பிரமணியம்.

2. சேதுஅம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் தெரியாது. சேதுஅம்மாள் இறந்த துக்கநிகழ்விற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். வேலாயுதம், காந்திமதி, வேம்பு, கலியமூர்த்தி, மேகநாதன் ஆகியோர் எந்த ஆண்டு, மாதம், தேதியில் RCC கட்டிடம் கட்டினார்கள் என்று தெரியுமா என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை, தோராயமாக 20 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடம் கட்டினார்கள், நான் அங்கு 40 வருடமாக இருக்கிறேன். நான் 40 வருடமாக அங்கு தான் குடியிருந்து வருகிறேன் என்பது குறித்து பிறப்பு சான்றிதழ், குடும்ப அட்டை, என்னுடைய குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ் போன்ற ஆவணங்கள் ஏதேனும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. வேலாயுதம், காந்திமதி, வேம்பு, கலியமூர்த்தி, மேகநாதன் ஆகியோர் குடியிருந்து வரும் சொத்து கிரயமா, தர்ம சொத்தா அல்லது பட்டா மூலம் பெறப்பட்ட சொத்தா என்று ஒவ்வொருவருக்கும் தனிதனியே தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அவர்கள் தங்கியுள்ள இடத்திற்கு வடக்கால் வாதி முத்துராஜின் சொத்து இருக்கிறது தெரியுமா என்றால் தெரியும். வாதி முத்துராஜ்ம் அவரின் பங்காளிகளுக்கும் சிவபுரியில் நிலங்கள் உள்ளதா என்றாலும், அதில் இருந்து வரும் வருமானங்களில் தர்ம காரியங்கள் செய்வது பற்றியும் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கு நான் எப்படி சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் நானாகவே சாட்சியம் அளிக்க வேண்டும் என வந்தேன். எப்படி நானாகவே சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சிவபுரியில் உள்ள 8 பிரதிவாதிகளும் சொன்னதால் சாட்சியம் அளிக்கவந்தேன். மேற்சொன்ன 8 பிரதிவாதிகளின் யாரேனும் உறவுகாரர் இருக்கிறாரா அல்லது அவரிகளில் யாருக்காவது நான் பெண் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

4. அவர்கள் தங்கியுள்ள இடத்திற்கு அருகே உள்ள சாலை யார் போட்டது என்றால் அரசாங்கம் போட்டு இருக்கலாம். வாதியின் நிலத்தையும், பிரதிவாதிகளின் நிலத்தையும் பிரிக்கும் அத்து தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் சொத்தை எப்படி சுவாதீனம் அடைந்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. யார் யார் எந்த எந்த வருடம் முதல் சொத்தை தனிதனியாக அனுபவித்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளின் சொத்து அனுபவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதிகள் சொத்து கிரயம் பெற்ற மூல ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்தது இல்லை. பிரதிவாதிகள் RCC கட்டிடம் கட்டியதற்கு பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுள்ளனரா என்பது குறித்து தெரியுமா என்றால் தெரியும், அரசால் வழங்கப்பட்டது, பஞ்சாயத்து அனுமதி வழங்கியதை நான் நேரடியாக பார்க்கவில்லை.

5. பிரதிவாதிகள் கிரயம் வாங்கியதாக கூறப்படும் பத்திரத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் குடியிருந்த இடத்தை highways துறையினர் கையக படுத்தியதால் அவர்கள் வாதியின் இடத்தில் குடியேறினார்கள் என்றால் இல்லை. நான் எத்தனை வருடமாக அங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் 50 வருடங்கள். என்னுடைய வயது என்ன

வென்றால் 69 வயது. மீதி 19 வருடம் எங்கிருந்தேன் என்றால் அங்கேயே தான் குடியிருக்கிறேன். என் தகப்பனாரின் சொந்த ஊர் என்னவென்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனாரின் சொந்த ஊர் காரைக்கால் என்றாலும், நான் எனது மகளின் திருமணத்திற்கு பின்னிட்டு சிவபுரிக்கு குடிவந்தேன் என்றாலும், பிரதிவாதிகளின் அறிவுறுத்தலின் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் வீடு வாங்கினோம் என்றால் கணக்கு சொல்ல இயலாது. நான் பிறந்தது காரைக்காலில் தான், இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதி ராமசாமிக்கு என்னுடைய மகளை திருமணம் செய்து கொடுத்ததால் அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri
Additional District Munsif(FAC)
Chidambaram.